# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2131/27 - 2019 ජූලි මස 10 වැනි බදදා - 2019.07.10

*2131/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GAL/LAN/ACQUIS/A13/49.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கோவை இல.: 4-3/15/2018/VE/09.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபிட்டப்பத்துவ தெற்கு சிறு பிரிவில், இல. 64ஏ, அரந்தர கிராம அலுவலர் பிரிவில், அரந்தர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கே 3681 மற்றும் 2019.04.10 ஆந் திகதிய வரைபடத்தில் துண்டு இல. 01 மொத்த அளவில் 1.6942 ஹெக்டயார் (04 ஏக்கர் 29.8 பர்சஸ்) விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 01 - காணியின் பெயர் : மைலன்ட்ஸ்வத்த; விஸ்தீரணம் : 1.6942 ஹெக்டயார்**

வடக்கு : வீதி; கிழக்கு : வீதி மற்றும் துண்டு இல. 02; தெற்கு : துண்டு இல. 2, அட்டாலவத்த பட்டுபிட்டிய பிரிவு மற்றும் கொஸ்வத்த கும்புர; மேற்கு : கொஸ்வத்த கும்புர மற்றும் வீதி.

**உரிமை கோருவோர் :**

01. முகாமைத்துவப் பணிப்பாளர், கேகாலை பெருந்தோட்டக் கம்பனி, இல. 310, ஹய்லெவல் வீதி, நாவின்ன, மஹரகம.
02. தலைவர், காணி சீர்திருத்த ஆணைக்குழு, இல. ஸீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு - 07.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கலிகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டு தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். ஸீ. சுசன்த ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2019, யூலை 05.

7 - 837